கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.அமதுமதி,

ந.க.எண்.1330 2025/எப்1 **நாள்.26.08.2025**

பொருள் : மனைப்பிரிவு - கூடலூர் நகராட்சி (கோ) - கூடலூர் கிராமம் க.ச.எண். க.ச.எண். 795/3 ல் அமைந்துள்ள .1.665 ஏக்கரில் உள்ள இடத்தில் 39 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி கோரியது - இறுதி ஒப்புதல் - வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. கோயம்புத்தூர் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் உத்திரவு ந.க.எண். CBELPA/5IV7VTVE/2024/2025/TCP, நாள். 03.02.2025.
2. நகர்மன்றத் தீர்மானம் எண். 842, நாள்31.07.2025

-*-

உத்திரவு :-

பார்வை 1ல் கண்டுள்ள கோயம்புத்தூர் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கூடலூர் கிராமம் க.ச.எண். 795/3 ல் அமைந்துள்ள 1.665 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./கோ.உ.தி.கு.எண்.45/2025 என எண்ணிடப்பட்டு சில நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கண்ட நகர்மன்றத் தீர்மானத்தில் மேற்கண்ட புல எண்களில் அமையும் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவுக்கான செலுத்தவேண்டிய கட்டணங்கள் கூடலூர் நகராட்சி கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கூடலூர் கிராமம் க.ச.எண். . 795/3 ல் அமைந்துள்ள.1.665 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் 39 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவுக்கு (ம.வ./கோ.உ.தி.கு.எண். 45/2025 மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக எந்த மாற்றமும் செய்யக்கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் (SPLAY) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருத்தத்தோடு அமைக்கப்படவேண்டும்.
3. இறுதி ஒப்புதல் பெறுவதற்கு முன்பு மனையிடத்தில் வேறு எந்த பரிமாற்றமும் செய்யக்கூடாது.
4. வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.
5. மனைப்பிரிவில் கட்டிடங்கள் தனித்தனியாக மட்டுமே கட்டப்பட வேண்டும்.

6. கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கும் பொழுது நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் நிபந்தனையின்படி விதிகளைப் பின்பற்றப்படவேண்டும்.
7. மனைப்பிரிவிற்குள் மண் தோண்டி எடுத்து பள்ளங்களோ, குழிகளோ ஏற்படுத்தக்கூடாது.
8. மனைப்பிரிவில் உள்ள அனைத்து சாலைகளிலும் நிழல் தரும் மரங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. ஒவ்வொரு மனையிடங்களில் கட்டிடம் கட்டும்போது உள்ளாட்சியில் தனியே விண்ணப்பித்து கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெறப்படவேண்டும்.
10. மனைப்பிரிவு சாலைகள் பாதிக்கின்ற வகையில் மனைப்பிரிவைச் சுற்றி சுற்றுச்சுவரோ, வேலியோ போடக்கூடாது.
11. பத்திரப்பதிவு செய்யும்போது நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் நிபந்தனைகளை பத்திரங்களில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.
12. மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற பின்னர் மனைப்பிரிவு சம்பந்தமான விவரங்கள் அனைத்தும் அறிவிப்புப் பலகை மூலம் தெளிவாக பார்வைக்கு வைக்கவேண்டும்.
13. கோயம்புத்தூர் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு அனுமதி எண். ம.வ./கோ.உ.தி.கு.எண். 45/2025 ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்திற்கும் கட்டுப்படவேண்டும்.
14. வரைபடத்தில் கண்டுள்ள மனைப்பிரிவில் உள்ள மனைகளில் எவ்வித மாறுதல்கள் அனுமதியின்றி செய்யக்கூடாது.
15. மனைப்பிரிவில் கண்டுள்ள வளர்ச்சிப் பணிகள் பழுது ஏற்படாமல் மனைகள் வழங்கப்படுவதுடன், நகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவிக்கும் கூடுதல் வளர்ச்சிப்பணிகள் தேவைப்படின் செய்து கொடுக்கப்படவேண்டும்.
16. மேலும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971ல் தெரிவித்துள்ளபடி மனைப்பிரிவு விதிகள் அனைத்திற்கும் கட்டுப்படவேண்டும்.
17. எக்காரணத்தைக் கொண்டும் பொது இடங்களை விற்பனை செய்யவோ, ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.
18. பொது இடங்களை சுற்றி தற்போது சொந்த செலவில் கம்பி வேலி அமைத்து அதில் பொது உபயோக இடம் என விளம்பரப் பலகை அமைத்து தர வேண்டும்.
19. அனுமதிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள மனைகளை உரிய அனுமதியின்றி உட்பிரிவு செய்தல் கூடாது.

26/8/25

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி(கோ)

26.8.25

இணைப்பு :- நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.

பெறுதல் :-

திரு வி. செல்வராஜ்
50/,3 விஜயநகர்,
ஜோதிபுரம்.
கோயம்புத்தூர்-47.

நகல் :-

1) நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோவை
2) சார்பதிவாளர், பெரியநாயக்கன்பாளையம்அலுவலகம்.

நகராட்சி அலுவலகம்

கடலூர்

ந.க.எண்.1330/2025/எப்1 நாள்.29.05.2025

அறிவிப்பு

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – கடலூர்(கோ) நகராட்சி – கடலூர் கிராமம் - க.ச.எண்795../3ல் உள்ள 1,665 ஏக்கர் பரப்பில் உள்ள மனைப்பிரிவு இடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்தது குறித்து நகராட்சி பொறியாளரிடம் அறிவுரை பெற்று வசதிகள் மேற்கொள்ள தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை : 3. கோவை நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் கடிதம்ROC.No.CBELPA/51/V7VTVE/2024/2025/TCP,நாள்.03,02,2025

4. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/ டிபி-2, நாள்.20.10.2022.

--:--

பார்வை 1-இல் காணும் கோவை நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கடலூர்(கோ) நகராட்சிக்குட்பட்ட கடலூர் கிராமம் க.ச.எண். 795.3ல் உள்ள 1,665 ஏக்கர் பரப்பில் உள்ள இடத்திற்கு 39 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு உரிமையாளர் மனைப்பிரிவில் உள்ள அடிப்படை வசதிகளை தாமே செய்வதாக தெரிவித்துள்ளார். பார்வை 2-இல் காணும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பின்பற்றி மனைப்பிரிவிற்கு தேவையான அடிப்படை வசதிகளான சாலை வசதி, வடிகால் வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதி ஆகியவற்றினை கடலூர்(கோ) நகராட்சி பொறியாளரின் அறிவுரை பெற்று அதன்படி மட்டுமே மேற்படி அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும், மேலும் நகராட்சி பொறியாளரின் அறிவுரை பெறாமல் தாங்களாகவே மனைப்பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேற்கொண்டால் அதற்கு நகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது என தங்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

29/5/25

ஆணையாளர்(கூ.பொ)

கடலூர் நகராட்சி(கோ)

இணைப்பு : சுற்றறிக்கை நகல்.

பெறுநர்,

திரு.வி,செல்வராஜ்

50/3 விஜயநகர்,ஜோதிபுரம்கோவை.

நகல்.

நகராட்சி பொறியாளர்,கடலூர் நகராட்சி(கோ)